**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2022**
**C012 இடைக்கால இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. நாலடியார் எத்தனை வெண்பாக்களைக் கொண்டது?
2. அழகும் இளமையும் --------------- கெடும்.
3. நண்டுக்கு எமன் யார்?
4. எந்த நாளில் மரங்களை வெட்ட மாட்டார்கள்?
5. சமண சமயம் சார்ந்த அறநூல்கள் யாவை?
6. மூதுரையின் கடவுள் வாழ்த்தில் போற்றப்பட்டுள்ள கடவுள் யார்?
7. வெற்றிவேற்கையின் வேறு பெயர் யாது?
8. அனைவருக்கும் தெய்வமாகக் குமரகுருபரர் யாரைக் குறிப்பிட்டுள்ளார்?
9. சங்க இலக்கியத்தில் இடம்பெறும் சிற்றிலக்கிய வகை யாது?
10. குறத்தியின் கணவன் பெயர் யாது?
11. மடல் இலக்கிய வகையின் வேறு பெயர்கள் யாவை?
12. கோவை நூல்களில் முதலில் வைத்துக் கூறப்படும் நூல் எது?
13. பள்ளு இலக்கியங்கள் மிகச்சிறப்புடன் உருவான காலம் எது?
14. உலா இலக்கணத்தை முதலில் கூறிய நூல் எது?
15. முதல் அந்தாதியாகக் கருதப்படும் அந்தாதி எது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. கல்விச் செல்வத்தின் சிறப்பு யாது?
2. 'சிறந்த பத்து' அதிகாரத்தின் பெயர்க் காரணத்தைக் குறிப்பிடுக.
3. எவை அறநூல்கள் என்று அழைக்கப்படுகின்றன?
4. மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ் நூல் அரங்கேற்றத்தின் போது நிகழ்ந்த அற்புதம் யாது?
5. சிற்றிலக்கியங்களைப் பொருள் அடிப்படையில் எவ்வாறு பாகுபாடு செய்யலாம்?
6. சிலர் இன்பத்தை விட்டுவிட்டு வீட்டைத் தேடி அலைவர் என்பதற்குச் சிறிய திருமடல் கூறும் உவமை யாது?
7. 'தொடுக்கும் கடவுள் பழம்பாடல்' எனும் பாடல்வழி மீனாட்சியம்மையின் மாண்புகளை விளக்குக.
8. தண்டலையார் சதகம் குறிப்பிடும் உயர்ந்த பண்புகள் யாவை?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) நாலடியார் கூறும் நிலையாமை குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) இலக்கியங்களில் பழமொழிகள் இடம்பெற்றுள்ளன என்பதைச் சான்றுடன் விளக்குக.

2. (அ) உலகநீதி கூறும் அறக்கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சிற்றிலக்கியப் பாகுபாடுகள் குறித்து கட்டுரை வரைக.

3. (அ) மடல் இலக்கியம் குறித்து கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) உலாவின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விளக்குக.

***